# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 27
விலை ரூபாய் 20.00

தீபம்-27 | சித்திரை இதழ்-2016,
ஆரம்பம் 15 மாசி-2013.

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 222 1022, 026 320 2532


"ஆண்டவரின் செயல்கள் நீதியானவை". (தி.பா 103:6)

## ஆயரின் செய்தி



**உயிர்த்த இயேசுவில் அன்பு உள்ளங்களே,**

உயிர்ப்பு பெருவிழாவாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். 'கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்' 1 கொரி 15:14. கிறிஸ்துவின் உயிர்ப்பு முழு உலகிற்கே, மனித சமூகத்திற்கே வாழ்வு. இது எமது அசைக்க முடியாத நம்பிக்கை. இயேசு சாதாரண மனிதரைப்போல பிறந்து வாழ்ந்தாலும் சாதாரண மனிதரைப்போல இறந்து அடக்கம் செய்யப்பட்டதோடு அவர் வாழ்வு முடிவுறவேண்டும் என்றிருக்கவில்லை. அவரது உயிர்ப்புதான் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தனது பகிரங்கவாழ்வில் பலபோதனைகள், புதுமைகள், ஒப்புரவு, மன்னிப்பு, அடையாளங்கள், வழிகாட்டல்கள் என்று செயல்பட்டாலும் அவற்றின் உச்சமாக அவரது பாடுகள், மரணம் உயிர்ப்பு இருந்தது. இவ்வாறு தனது உயிர்ப்பின் மூலமாக பகைமையை ஒழித்து தடைச்சுவரை உடைத்து ஒப்புரவை ஏற்படுத்தினார். இதனால் நாம் இறைவனை 'அப்பா தந்தாய்' என அழைக்கமுடியும். அவரோடு நெருங்கிய உறவை ஏற்படுத்த முடியும். முதல் மனிதன் ஆதாமினால் வந்த பாவம், சாபம், மரணத்தை இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து தனது மரணம்,உயிர்ப்பினால் மீட்டுத் தந்தார். அவரை விசுவசித்து, திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் உயிர்ப்பின் மக்களாக வாழ்ந்து காட்ட அழைக்கப்பட்டுள்ளோம். இதற்கு தூயபவுல் போல பயணங்கள் மேற்கொள்ளவேண்டியதில்லை. பணம் செலவழிக்க வேண்டிய தில்லை. சாதாரண, நாளாந்த வாழ்வின் சூழலில் எமது மனநிலை, வார்த்தைகள், செயல்களை நல்லவையாக்கிடுவோம். எமது இல்லங்களில் எமது நல்ல செயல்கள், வேலைத்தளங்களில் எமது நேர்மையின் வெளிப்பாடு, பங்கில் எமது அர்ப்பணம் போன்றவற்றின் மூலமாக நாம் உயிர்ப்பின் மக்களாக வாழ்ந்து காட்டலாம். துணிவோடும் நம்பிக்கையோடும் வாழ்ந்து காட்டுவோம்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

திருகோணமலை மறைமாவட்டத்தில்
குருத்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலி திருகோணமலை ஆயர்
அதிவந்தனைக்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
ஆண்டகையினால் அருட்பொழிவு செய்யப்படவுள்ளார்.

**அருட்சகோதரர் பற்றிக் ஸ்பாக்ஸ் றொய்சன்**
(தியாக்கோன்)



தொடர்ச்சி 2ம் பக்கம்



## அன்னை திரேசாவை புனிதராக அறிவிக்க திருத்தந்தை இரண்டாம் பிரான்சிஸ் ஒப்புதல்.

வத்திக்கான் அன்னை திரேசாவை வரும் 4ம் திகதி புனிதராக அறிவிக்க திருத்தந்தை இரண்டாம் பிரான்சிஸ் ஒப்புதல் அளித்துள்ளார். அல்பேனியா நாட்டில் 1910ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் அன்னை திரேசா. அவரது இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஸா போஸாஸ்யூ. இளம் வயதிலேயே சமூக சேவையில் ஈடுபட்ட அவர் 1929ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார். லோரட்டோ மடத்தின் கொல்கத்தா கிளையில் இருந்து கொண்டு பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றினார். ஆதரவற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் தந்தவர். தொழுநோயாளிகளுக்காக ப்ரேம் நிவாஸ் இல்லத்தை தொடங்கினார்.

அன்னை திரேசாவிற்கு 1980ல் பாரத ரத்னா விருது வழங்கிக் கௌரவித்தது இந்திய மத்திய அரசு. முன்னதாக 1979ல் அன்னை திரேசாவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஏழைகளுக்கான சேவையின் அடையாளமாக திகழ்ந்த அன்னை திரேசா 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 5ம் திகதி இறைபதமடைந்தார்.

## திருகோணமலை மறைமாவட்ட மறையாசிரியர்களுடன் (எமது) ஆயர் அவர்களின் சந்திப்பு













கடந்த 19-03-2016 அன்று நண்பகல் 11.30 மணியளவில் எமது மறை மாவட்ட ஆயர் அதி.வண.கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் சகல பங்குகளிலுமுள்ள மறையாசிரியர்களை திருமறைக் கல்வி நடுநிலையத்தில் சந்தித்தார்.

அவர் தனது உரையில் தனது ஐந்து வருடப் பணிபற்றியும் செயற்படுத்தப் போகும் செயற்திட்டங்கள் பற்றியும் மறையாசிரியர்களுக்கு எடுத்துரைத்தார். அத்துடன் அவரது குறிக்கோளான முப்பணிகள் பற்றியும் எடுத்துக்கூறினார்.

**அவையாவன,**

*01) கல்வி*

*02) ஆன்மீகம்*

*03) பொதுநலப்பணி*

இவை பற்றிய விளக்கம் வழங்கிய ஆயர் மறையாசிரியர்களிடம் அவர்களது தேவைகள் எதிர்காலத்தில் இம் மூன்று விடயங்களிலும் எவ்விதம் கவனம் செலுத்தலாம். அல்லது வளர்ச்சியடையலாம் என்பது பற்றியும் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் மறையாசிரியர்களை பங்கு ரீதியல் குழு ஆய்வு செய்ய வைத்து அதன் மூலம் வந்த பதில்களையும் கவனத்தில் கொண்டு ஆயர் அவர்கள் 15 பங்குகளிலுமிருந்து வந்திருந்த மறையாசிரியர்களை 15 பேர் கொண்ட குழுவாக நியமித்தார்.

அக்குழுவானது பங்குகளிலும் சமூக நலப்பணிகளிலும் மறை மாவட்டத்தை வளர்த்தெடுக்கும் நோக்கமாக செயல்படுவதற்கு தயார் செய்யப்பட்ட குழுவாகும். இக்குழுவானது திருமறைக்கல்வி நிலையத்தினூடாகவே செயற்படும் என்பதும் ஆயரின் வலியுறுத்தலாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வழியும் உண்மையும் வாழ்வும் நானே" (யோவான் 14:6)

## உங்களோடு பேசுகிறேன்...

அருட்பணி. N.C. அருள்வரதன்

மீண்டும்உங்கயோடு பேச எனக்கொரு வாய்ப்பு பெருமகிழ்வே. பங்குனி முடிந்த மாதத்திலே பாஸ்கா நிகழ்வுகள் புனித வார நிகழ்வுகள் என இயேசுவின் திருப்பாடுகளை நினைவுகூர்ந்து மனமாற்றங்களின் காலமாக்கி நிறைந்த ஆறுதலுடன் அக்காலம் கலைந்தது. உயிர்ப்பின் காலங்களிலே இயேசு பல தடவைகள் தமது உயிர்ப்பை வெளிக்காட்டி வருகின்றார். "ஆணி கொண்ட அவருடைய காயங்களைப்பார்த்து காயங்களுக்குள் என் விரலை இட்டாலொளிய நான் நம்பமாட்டேன்". இயேசுவின் உயிர்ப்பை நம்பாத சீடர் தோமாவின் தொடர்களிவை. கண்டு விசுவசிப்போரைவிட காணாமல் விசுவசிப்போரே பேறுடையார் என்பது மீண்டும் காட்சியளித்த இயேசுவின் பதில். இயேசுவோடு வாழ்ந்து வளர்ந்து மறைந்தும் வாழும் இயேசுவை ஏற்க மறுக்கும் சீடரின்நிலை இவ்விதமிருக்க நாம் கண்ட விசுவாசம், நாம் கொண்ட விசுவாசம் வேறானதாகும். மண்ணைச் சார்ந்த அனைத்து நிலைகளையும் கிறீஸ்துவோடு ஒப்பிடும்போது குப்பை எனக்கூறும் பவுல் அடிகளாரைப் போன்று நாமும் இக்காலத்தினால் வளங்கள் பெறவேண்டும். வார்த்தைகளை வாழ்வாக்கி உயிர்த்த இயேசுவோடு ஒன்றிக்கவேண்டும்.

புதிய மாதத்திலே மூன்றாம் நாளிலே இறை இரக்கப் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். தேசிய ரீதியிலே பத்தாம் நாளிலே அன்பிய நிகழ்வுகளையும் கொண்டாடுகின்றோம். இம் மாதத்திலே நற்செய்தியாளர் தூய மாற்கு விழாவையும் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றோம். தேசிய ரீதியிலே பொது நிலையினரின் நாளையு ம் இம்மாதத்திலே சிறப்புறக் கொண்டாடுகின்றோம். எந்த நிலைகளில் நாமிருந்தாலும் நமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து மகிழ்வோடு பணிபுரிவோம்.

புதிய மாதத்தின் முதலாவது நாள் ஏப்ரல் ஒன்று முட்டாள்கள் தினம். சமகால அரசியலை நோக்கும்போது வேடிக்கை தினமாக மட்டுமல்ல பலரையும் மடையர்களாகக் கொண்டு செயற்படும் அரசியல் குளறுபடிகள் இவைகளுக்கு முன் உதாரணங்களாகி நிற்கின்றன. கட்சிகளுக்குள் மாறுபட்ட நிலைகள். புதிய நிலையிலே அரசியல் மாற்றங்கள் ஏற்பாட்டாலும். மக்களைப் பொறுத்தவரையில் எதுவித நிலை மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எது எப்படி எனினும் மக்களின் நிறைவான வாழ்வு அதுவே வேண்டியது இன்னும் கைதிகள் பற்றிய நிலை இன்னும் முழுமை பெறாமல் நகர்ந்து கொண்டிருப்பது வேதனைக்குரியதே. விரைவில் அது பற்றிய நியாயமான முடிவு கிட்டப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

இம் மாதத்தின் இன்னுமொரு சிறப்பு என்னவென்றால் தமிழ் சிங்கள புதுவருடம் பதின்மூன்றாம், பதினான்காம் திகதிகளில் கொண்டாடப்பட உள்ளது. சிறப்புறும் புதிய வருடத்தினைக் கொண்டாடும் தமிழ் சிங்கள சகோதரங்களுக்கு எமது இதயம் கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்களைக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மேலும் இம்மாதம் ஒன்பதாம் திகதி அருட்சகோதரர் றொய்சன் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுகின்றார். இறைபணியை இன்பமாய் ஏற்று மறை பணியை மகிழ்வோடு நிறைவேற்றி வாழ ஆசி கூறுகின்றேன். அனைத்தும் நல்லதாய் அமையட்டும். இயேசுவின் பாதைகளில் துன்பங்களே நிறைந்துள்ளன. கல்லும் முள்ளும் நிறைந்த கடின பாதைகள். என்னைப் பின் செல்ல விரும்புகின்றவர் தன்னையே மறுத்து தன் நாளாந்த சிலுவைகளை சுமந்து கொண்டு நடக்க அழைக்கும் இயேசுவின் குரலுக்கு செவிமடுப்போம். செவிமடுப்பது மட்டுமன்றி கேட்டுப் பின் பற்றி வாழ்வின் வெற்றிகளைக் கண்டடைவோம்.

புலரும் புதிய மாதம் வளரும் வளங்களை அள்ளித்தர ஆசிகூறி மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக்கூறி நிற்கின்றேன்.

### இலங்கையின் அமைதி மையத்திற்கு நிவானோ அமைதிப் பரிசு

24-02-2016 இலங்கையின் அமைதி மற்றும் ஒப்புரவு மையம், நிவானோ (Niwano) அமைதிப் பரிசுக்கென இவ்வாண்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுப் போரினால் பாதிக்கப் பட்டுள்ள இலங்கையில் அமைதியையும் , ஒப்புரவையும் உருவாக்க திஷாணி ஜயவீர (Dishani Jayaweera) மற்றும் ஜயந்த செனவிரத்ன (Jayantha Seneviratne) என்ற இருவரும் 2002ம் ஆண்டு உருவாக்கிய ஓர் அமைப்பு, ஜப்பான் நாட்டு நிவானோ அமைதி பரிசுக்கென தேர்தெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அமைதியைக் கொணர மதத்தலைவர்கள், பெண்கள், இளையோர் ஆகியோர் பெரும் பங்கு வகிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இலங்கை அமைதி மற்றும் ஒப்புரவு மையம் செயல்பட்டு வருவதாக ஆசிய செய்தி குறிப்பொன்று கூறுகிறது. இந்த பரிசுக் குரியவரின் தேர்வில் 125 நாடுகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்டோர் அடையாளப்படுத்தப் பட்டனர் என்றும் இவர்களில் இலங்கையைச் சேர்ந்த இவ்வமைப்பு தேர்தெடுக்கப்பட்ட தென்றும் ஆசிய செய்தி மேலும் கூறுகிறது. 20 மில்லியன் யென் (1,20,00,000 ரூ) மதிப்புள்ள இந்த பரிசுத்தொகை மே மாதம் 12ம் திகதி டோக்கியோ நகரில் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி.........

## மறைமாவட்ட பாதுகாவலர் தூய லொயலா இஞ்ஞாசியார்



அருட்தந்தை. ஆஞ்சலோ பொன்னையா. இ.ச.

### வந்தாரைவாழவைக்கும் வழித்துணைமாதா:

சமூக இறைபணி செய்யும் தோழர்களுக்கு என இல்லமொன்று இல்லையென உரோமை நகரில் உள்ள ஒரு பங்குத்தந்தை பீட்டர் கொடாச்சியோ வருந்தினார். திருத்தந்தையிடம் பரிந்து பேசி தனது பங்குக் கோயிலை இயேசுசபைத் தோழர்களுக்கு புரட்டாதி திங்கள் 24ம் நாள் தானமாக வழங்கினார். இச்சிற்றாலயத்திற்கு "வழித்துணை மாதா" (மடோன்னாதெல்லா ஸ்த்ரராடா) என்றுபெயர். இந்த ஆலயத்தின் வழியாகத் தான் அரச பெருமக்களும், இராணுவமும், அரச ஊழியர்களும், ஆயர்களும், கருதினால்களும், திருத்தந்தையர்களும் இத்தாலியின் தலைமைச் செயலகத்திற்குச் செல்ல வேண்டும். செல்லும் வழியில் இவ்வாலயத்திற்கு முன் நின்று செபித்துச் செல்வது வழக்கம். எனவே தான் இச்சிற்றாலயம் இப் பெயரைப் பெற்றது. 14ம் நூற்றாண்டில் யாரோ ஒரு ஓவியர் வரைந்த அழகான அன்னை மரியாளின் வண்ணப்படமொன்று இருந்தது. அதற்கு "வழித்துணைமாதா" என்பது பெயர். இந்த அன்னை இயேசு சபை பிறந்ததை வளர்ந்ததை, இஞ்ஞாசியாரின் மரணத்தை 17ம் நூற்றாண்டிலே இயேசு சபை தடைசெய்யப்பட்டதை, 41 ஆண்டுகளுக்குப் பின் இச்சபை மீண்டும் உயிர் பெற்றெழுந்ததை. இன்று இயேசு சபை பொலிவோடும் மாட்சியோடும் பாரெங்கும் பரந்து விரிந்து திருச்சபைக்கு மகுடமாக இருப்பதைக் கண்டுகளித்து வருகின்றாள். ஆகவே இவ் வழித்துணை மாதாவை இயேசுசபையின் அன்னையென அழைப்பது பொருத்தமானதே.

### இயேசுசபையின் முதல் தளபதி:

1541ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 19ம் நாள் தமது தோழர்களால் இயேசுசபையின் முதல் தலைவராக இஞ்ஞாசியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தலைமைத்துவத்தை இஞ்ஞாசியார் பணிவோடும் தாழ்ச்சியோடும் கீழ்ப்படிவோடும் ஏற்றுக்கொண்டார். 1541ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 22ம் திகதி இஞ்ஞாசியாரும் அவரது தோழர்களும் உரோமை நகரில் உள்ள புனித பவுல் பேராலயத்தில் தமது இறுதி வார்த்தைப்பாட்டை அளித்தனர். இஞ்ஞாசியார் 15 ஆண்டுகளாக இயேசு சபையின் தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். இயேசு சபையை வளர்த்தும் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் மறைக் கல்வி போதித்தும் வந்தார். "ஆன்மீகப் பயிற்சிகளை" அளித்து பலரது ஆன்மாக்களை ஆற்றுப்படுத்தினார். ஸ்பெயின் நாட்டின் திருத்தந்தையின் தூதுவராக இருந்த டாக்டர் ஓர்த்திஸ் என்பவருக்கு "மோந்தே கசினோ" (Monte Cassino) என்ற மடத்தில் ஆன்மீகப் பயிற்சிகளை வழங்கினார். இவர்தான் இஞ்ஞாசியார் பாரிஸ் நகரில் பட்டப்படிப்பு படிக்கும் பொழுது இஞ்ஞாசியார் தப்பறையான கொள்கைகளைப் பரப்புகின்றார், மூளைச் சலவை (Brain wash) செய்து இளைஞர்களைத் திசை திருப்புகின்றார் எனப் பலவகையில் இஞ்ஞாசியாரைத் துன்புறுத்தியவர். திருச்சபையின் கருதினால்களில் முக்கிய புள்ளியாக இருந்த கர்தினால் கொந்தாரீனுக்கும் "ஆன்மீகப் பயிற்சிகளைப்" போதித்தார். இவ்வாறு கருதினால்கள், ஆயர்கள், குருக்கள் பல நாட்டுத் தூதுவர்கள், பொதுநிலையினர் எனப் பலருக்கு தியானம் கொடுத்து அவர்களது ஆன்மாக்களை நெறிப்படுத்தினார். சமூகப் பணிகளிலும், ஏழை எளியோர் விடுதலை பெற அவர்களுக்கும் பேருதவியாக இருந்தார். அனாதை இல்லங்கள், வாழ்வில் தவறிப் போன பெண்கள் மறு வாழ்வு பெற, புதிதாக மனம் மாறிய யூதர்கள் போன்றோருக்குப் புனர்வாழ்வு இல்லங்களை நிறுவினார். இயேசுசபைத் தலைவராக இருந்தபோது சபையைக் கண்காணிக்கும் வண்ணம் சுமார் 7000 கடிதங்களை தம் கைப்பட எழுதினார்.

தொடரும்...

1ம் பக்கத் தொடர்ச்சி...

### அருட்சகோதரர் பற்றிக் ஸ்பாக்ஸ் றொய்சன் (தியாக்கோன்)

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருட்சகோதரர் பற்றிக் ஸ்பாக்ஸ் றொய்சன் |
| இடம் | : | திருகோணமலை மறைமாவட்டம் |
| பங்கு | : | குவாடலூப்பே அன்னை ஆலயம் |
| பெற்றோர் | : | தந்தை - பற்றிக் ஸ்பாக்ஸ் |
| | | தாய் - ஆரோக்கியம் |
| சகோதரிகள் | : | இரண்டுபேர் |
| ஆரம்பக்கல்வி | : | தி/தூய சூசையப்பர் தேசிய கல்லூரி |
| இடைநிலைக்கல்வி | : | தி/ தூய சூசையப்பர் தேசிய கல்லூரி |
| க.பொ.த. உயர்கல்வி | : | ம/தூய மிக்கேல் தேசிய கல்லூரி |
| 14.01.2001 | : | சிறிய குருமடம் மட்டக்களப்பு |
| 21.06.2007 | : | இடைநிலை குருமடம், களுத்துறை |
| 2008-2010 | : | மெய்யியல் கல்வி, கண்டி அம்பிட்டிய |
| 2010-2011 | | |
| மேய்ப்புப்பணி அனுபவம்: | | தூய மரியாள் பேராலயம், மட்டக்களப்பு |
| | | சொறிக்கல்முனை திருச்சிலுவை ஆலயம், மட்டக்களப்பு |
| 2011-2015 | : | இறையியல் கல்வி கண்டி, அம்பிட்டிய |
| 14.10.2015 | : | தியாக்கோன், கண்டி தேசிய குருமடம். |
| | | அதி.வந்.கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் |
| 2015 முதல் இன்றுவரை | : | திருத்தொண்டராக தூய மரியாள் பேராலயம், திருமலை |
| 09.04.2016 | : | குருவாக திருநிலைப் பணி |
| | | அதி.வந்.ஆயர் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் |

இவரது பணி வாழ்வு சிறக்க
செபிப்போம் வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA

Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11-2697062 / 2697110
Fax No : 0094-11-2699619
E-mail : EpiscopalSL@gmail.com


# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உயிர்ப்பு பெருவிழா செய்தி - 2016

மீண்டுமொருமுறை திருவழிபாட்டு ஆண்டின் உச்சக்கட்டமான உயிர்ப்பைக் கொண்டாடி நசரேத்தூர் இயேசுவை உயிர்த்த ஆண்டவரும், மீட்பரும் எனப் பறைசாற்றுகின்றோம். அதன்படி தூதர்களின் வார்த்தைகள் எம் காதுகளில் மீண்டும் ஒலிக்கட்டும், "உயிரோடு இருப்பவரை இறந்தவர் மத்தியில் தேடுவான் ஏன்? அவர் இங்கு இல்லை, அவர் உயிர்த்து விட்டார்" (லூக் 24:5).

இவ்வருடம் இம் மகிழ்ச்சி நிறை கொண்டாட்டம் இடம்பெறுவது, எமது திருத்தந்தைப் பிரான்சிஸ் ஆண்டகையால் பிரகடனப்படுத்தப்பட்ட இரக்கத்தின் ஆண்டில் என்பதும் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் திருத்தந்தை உலகளாவிய திருச்சபையில் இருக்கும் ஒவ்வொருவரையும் இயேசுவின் மீதான விசுவாசத்தின் மகிழ்ச்சியை புதுப்பித்துக் கொள்ளுமாறு இவ்வருடத்தை ஏற்படுத்தினார். மேலும் இயேசுவின் மீதான எமது விசுவாசம் எம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட விலைமதிக்க முடியாத கொடையே என்றால் மிகையாகாது. இயேசு கிறிஸ்துவின் மீதான எமது விசுவாசத்திற்காக கடவுளுக்கு நன்றி செலுத்தும் காலமே உயிர்ப்பின் காலமாகும். கடவுள் தம் ஒரே பேறான மகன் மீதான விசுவாசத்தை எமக்கு அளித்துள்ளார் எனும்போது அது மாபெரும் கொடையேயாகும். ஆகவே நாம் அவ் விசுவாசத்தை எமது தலைமுறையினருக்கு பரிசாகத் பெற்றுத்தருவதில் பங்களிப்பவர்களாகவும், நன்றி செலுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். இவ்வாறாக, இயேசுவில் விசுவாசங் கொண்டுள்ளோம் எனும் இவ்வாசீரை எண்ணி மகிழ்ந்து புகழ்பாட வேண்டியதும் எமது கடமையாகும்.

உயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலமானது இயேசுவின் மீதான அறிவை ஆழப்படுத்தவும், உயிர்த்த மீட்பர் எம்மத்தியில் இருக்கிறார் என்ற உணர்வைப் புதுப்பிக்கவும் அழைப்பு விடுக்கிறது. உயிர்த்த மீட்பர் மீதான எமது விசுவாசம் எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் முகங்கொடுக்கும் கஷ்ட துன்பங்களின் மற்றும் பிரச்சினைகளின் துணிவுடனும், மன உறுதியுடனும் செயற்படவும், அவரும் எம்மோடு பயணிக்கிறார் என்ற நம்பிக்கையும் அளிக்கிறது. உயிர்த்த ஆண்டவரின் இவ்வுடனிருப்பை உயிர்ப்பு எமக்கு பறைசாற்றுகிறது. மேலும் அவர் எமது மகிழ்ச்சியிலும், துன்பத்திலும் பங்கெடுக்கிறார் என்பதால் இவ்வுயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலம் எமது வாழ்வின் உண்மையான அர்த்தத்தையும் அளிக்கிறது.

உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்குத் தோன்றி அவர்களுக்கு அமைதியை கொடையாகக் கொடுத்தார். இயேசு சிலுவையிலே தன்னையே தந்து அவரது இரக்கம் மிகு அன்பை உணர்ந்து அதனை அனுபவத்திற்கு எமது திருத்தந்தை எம்மை இன்று அழைக்கின்றார். நாமும் அக்கொடையை கேட்டு நிற்போம். பௌதீக ரீதியான வளர்ச்சியை சில நிலைகளில் நாம் பெற்றுள்ள போதிலும் எம் தாய்நாட்டில் பணம் படைத்தவர் மற்றும் ஏழைகளுக்கிடையிலான இடைவெளி மிகைப்படுத்தப்பட்டுள்ளதையும் மறக்க முடியாது. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களின் விலைகளில் பாரிய உயர்வினால் ஏழைகளின் நாளாந்த வாழ்க்கை கடினமானதாகவும், கசப்பானதாகவும் மாறியுள்ளதையும் மறுக்க முடியாது.

எமது கிறிஸ்தவ சீடத்துவம் துன்புறுவோரில் இயேசுவின் முகத்தைக் கண்டு அக்கறை காட்டவும் பணி புரியவும் எம்மை அழைப்பதை நாம் மறந்துவிடலாகாது. எமது உயிர்ப்பின் மகிழ்ச்சி கிறிஸ்தவ சீடத்துவத்தின் கடமையை ஆழமாக எமக்கு உணர்த்த வேண்டும். எம்மைச் சூழவுள்ளோரின் தேவைகளை அகற்ற நாம் பாடுபட வேண்டும்.மேலும் எமது சாட்சிய வாழ்வின் மூலமாக கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின் அழகை ஏனையோரும் கண்டுணர்வார்களாக உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாகவும் அமைதியின் தூதர்களாகவும் செயற்பட முன்வருவோம்.

எமது புதிய திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகைக்காக உலகளாவிய திருச்சபையோடு சேர்ந்து நாமும் செபிப்போம் எல்லோருக்கும் எமது உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்களும், உயிர்த்த ஆண்டவரின் அமைதியும் மகிழ்ச்சியும் உரித்தாகுக.

✠ அதிமேதகு மல்கம் கருதினால் ரஞ்சித ஆண்டகை
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மன்றம்

✠ மேதகு D. வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை
பொதுச்செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர்கள்

CATHOLIC BISHOPS' CONFERENCE SRI LANKA

# நிஜமான நிகழ்வொன்றுடன்...
# பரிவுள்ளத்தை பகிர்ந்திடுவோம்

"நமது உடன்பிறப்புக்களை நேசிக்காதவர்கள்
கனியாத வாழ்க்கை வாழ்பவர்கள்" - ஷெல்லி

ஒருநாள் இராணுவத்தளபதி ஒருவர் தன்னுடைய அதிகாரிகளுடனும் இராணுவ வீரர்களுடனும் புகைவண்டியில் பயணித்துக் கொண்டிருந்தார். புகைவண்டி நிலையமொன்றில் புகைவண்டி நிறுத்தப்பட்டபோது, முதுமையில் தள்ளாடிய வயோதிபர் ஒருவர் ஏறினார். அவருக்கு அமர யாரும் இருக்கை கொடுக்கவில்லை. சிறிது நேரத்தின் பின்பு தான் முதியவர் முடியாத நிலையிலும், நின்று கொண்டு பயணம் செய்ததை அவதானித்த தளபதி தனது ஆசனத்தில் அவரை அமரவைத்தார். உடனே இரயிலில் இருந்த அதிகாரிகளும் இராணுவ வீரர்களும் தளபதிக்கு இருக்க இடமளிக்க முன் வந்தார்கள். இராணுவத் தளபதி அமைதியாக "உங்கள் தந்தை போன்ற இந்தப் பெரியவருக்கு இடம் கொடுக்காத நீங்கள் எப்படி உண்மையான மன விருப்புடன் எனக்கு இடம்தர முடியும்?" என்று கேட்டு எல்லோரையும் வெட்கிப்போகச் செய்தார்.

இரக்கம் என் இதயத்தின் ஆழத்திலிருந்து பிறரது துன்பம் கண்டதும் தானாக வரவேண்டும். மற்றவர்களது பதவியை, பட்டத்தை பாராட்டை நோக்காகக் கொண்டு சூழ்நிலைக் கேற்ப நடக்க முனைவது உண்மையான இரக்கமல்ல, அது நடிப்பு என்பதை இந்நிகழ்வு விளக்கி நிற்கின்றது.

" கருணை இல்லாத மனிதர்கள் வெறும் பூஜையாலும்,
செபத்தாலும் இறைவனுடைய கருணையைப் பெறமுடியாது"

என்கிறார் கிருபானந்தவாரியார். இரக்கம் என்ற இனிய பதத்துள் அன்பு, அகிம்சை, பரிவு, கருணை, சாந்தம், மன்னிப்பு என்னும் விலையுயரப் பெற்ற தூய்மையான தன்மைகள் உள்ளடங்கியுள்ளன. "நான்" என்ற

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

## மன்னார் மறைமாவட்ட ஆயர் செயலகத்திலிருந்து வேண்டுகோள் !



இராயப்பு ஜோசப் ஆண்டகை குறித்தோ மற்றும் ஆயர் இல்லத்தில் நிகழும் எந்த நிகழ்வாகினும் ஆயர் செயலகத்தின் அனுமதியின்றி தன்னிச்சையாக செயற்பட்டு எந்த கருத்துக்களையும்சமூக வலைத்தளங் பத்திரிகைகளிலோ வெளியிட வேண்டாம் என கேட்டு நிற்கின்றோம். மன்னார் மறை மாவட்ட ஆயர் வந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் 23 ஆண்டு கால தியாகம் நிறைந்த இக்கட்டான காலத்தில் கூட ஓங்கி ஒலித்த அவரது உண்மைக்கான நீதிக்கான குரலும் அவருடைய மனித நேயப்பணிகளும் இலங்கையில் மட்டுமல்ல மாறாக உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு பாராட்டப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். என மன்னார் மறைமாவட்ட ஆயர் செயலகம் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் இவ்வாறாக பல அரும்பணிகள் செய்த ஆயருக்க ஏற்பட்ட நோய் எம் எல்லோரையும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது.

ஆயர் செய்த பணிகளும் அவருடைய உண்மைக்கான குரலும் தொடர வேண்டும் என்பதே எல்லோருடைய செபமாகும். அவர் தற்பொழுது பல சிகிச்சைகளுக்குப் பின்ன தாக ஓரளவு உடல் நலம் தேறி ஆயர் இல்லத்தில் ஓய்வு பெற்று வருகின்ற வேளையில் அவரைப் பார்வையிட பல பிரமுகர்கள், அவரால் உருவாக்கப்பட்டவர்கள், அரசிய ல் தலைவர்கள் மற்றும் பங்கு மக்கள், என்றும் பலர் ஆயரை பார்வையிட்டும், மற்றும் மன்னார் மறை மாவட்ட த்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அப்போஸ்தலிக்க பரிபாலகரான அதிவந்தனைக்குரிய யோ.கிங்ஸ்லி சுவாம் பிள்ளை ஆண்டகை அவர்களை சந்தித்தும் ஆசீர் பெற்றும் செல்கின்றார்கள். ஆயர் இல்லம் வரும் அனைவரையும் என்றும் நாங்கள் அன்புடன் வரவேற்கின்றோம். ஆனால் கடந்த சில காலங்களாக அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடல் நிலை குறித்தும் மற்றும் மறைமாவட்டம் குறித்தும் வெளிவருகின்ற தவறான மற்றும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்கள் எங்க ளுக்கு அதிர்ச்சியையும் வேதனையையும் தருகின்றது.

எனவே எதிர்வரும் காலங்களில் ஆயரை சந்திக்க வரும் பிரமுகர்களோ, அரசியல் வாதிகளோ அல்லது அவர்களுடன் வருகை தரும் பத்திரிகையாளர்களோ இங்கு பேசப்படும் விடயங்களை மிகைப்படுத்தியோ அல்லது அவற்றை உங்களுக்கு சாதகமாகவோ மாற்றி திரித்துக் கூறி மக்கள் மத்தியில் பதட்டத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இனிவரும் காலங்களில் ஆயர் குறித்தோ மற்றும் ஆயர் இல்லத்தில் நிகழும் எந்த நிகழ்வாகினும் ஆயர் செயலக த்தின் அனமதி இன்றி தன்னிச்சையாக செயற்பட்டு எந்தக் கருத்துக்களையும் சமூகவலைத் தளங்களிலோ அல்லது பத்திரிகைகளிலோ வெளியிடவேண்டாம் என கேட்டு நிற்கின்றோம். என மன்னார் மறைமாவட்ட ஆயர் செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்ப-

## குட்டிக் கதை ஒன்று

Fr.N.C...

ஒரு வீட்டிலே கொண்டாட்டமொன்று நடந்து கொண்டிருக்கிறது. சாப்பாட்டு நேரம் எல்லோரும் சாப்பாட்டைப் போட்டு சாப்பிட ஆரம்பிக்கிறார்கள்.

ஆனால் ஒருவரும் சாப்பிடுவதாகத் தெரியவில்லை. முகங்களெல்லாம் ஒவ்வொரு விதமாக கோணுகின்றன.

அவர்களுள் ஒருவர் சற்றுப் பலமாகக்கூறுகின்றார்.
" இத எப்படிச் சாப்பிடுறது வாயில வைக்க ஏலாது சரியான உப்பு ".

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது உண்மை தான், ஆனால் உப்பை இப்படி அள்ளிக்கொட்டினால் எப்படி இருக்கும்.

இந்தச் சாப்பாட்டையும் அவ்வளவு இலகுவாக மறப்பார்களா? சொல்லுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இரக்கத்தின் கருணை எங்கே இருக்கிறது ?

இறைவன் இயேசு தம்முடைய இரக்கத்தை பாவிகளாகிய மக்களெல்லோர்க்கும் கொடுத்து, அவருடைய பாடுகள், மரணத்தின் வழியாகவே எண்பித்தார். தமது நண்பர்கள், பாவிகள், தம்மை பின்பற்றியோர், பின்பற்றாதோர், யூதர்கள், சமாரித்தர்,பரிசேயர், தம்மை வதைத்தோர், பற மதத்தினர் எல்லோர்க்காகவும் தமது இரக்கத்தைக் காண்பித்தார். இயேசுவின் இதயத்திலிருந்தும், இரத்தத்திலிருந்தும், தண்ணீரிலிருந்தும், சரீரத்திலிருந்தும், முழு ஆத்துமத்திலிருந்தும் இரக்கமானது மனிதர்களுக்காகவே கொடுக்கப்பட்டது. இந்த இரக்கமானது, அவர் விட்டுச் சென்ற, ஸ்தாபித்த ஆன்ம போசனமாகிய தேவ நற்கருணையில் வெளிப்படுகிறது. ஆண்டவர் தேவ நற்கருணையில் நித்திய அரசராக, ஆன்மாக்களுக்குள்ளே போசனமாக வருவது, அவருடைய பெரிய இரக்கத்தினாலே.


" ஆண்டவரே! நீர் உம் மக்கள் மீது இரக்கம் காட்டும்போது, என்னை நினைவு கூரும். அவர்களை நீர் விடுவிக்கும்போது, எனக்கும் துணை செய்யும்" திபா 106:4 இவ்வாறு தாவீது அரசர், தம் பேரரசராம் ஆண்டவரிடம் மன்றாடினார். தாம் பாவியென்று ஏற்றுக் கொண்டார். தம்மை கடைசியில் போட்டு, முதல் மக்களுக்கு இரக்கத்தைக் கொடுத்த பிற்பாடே, தனக்கும் துணை செய்தருளும் என்று தான் அவர் ஆண்டவரிடம் மன்றாடினார். எவ்வளவு தாழ்ச்சியுள்ள மன்றாட்டு என்பதை சிந்தித்து பார்ப்போம். புனித பவுஸ்தினா தாயாரும் இறைவனின் இரக்கத்தை பிறருக்கு கிடைக்கும் படி மன்றாடினார்.

" எங்கள் மீதும் முழு உலகின் மீதும் இரக்கமாயிரும் " என்று மன்றாடி வந்தார். இறை இரக்கத்தை பெற்றுக் கொள்ளும் நாம் அனைவரும் பிறருக்காகவும், முழு உலகத்திற்காகவும் மன்றாட அழைக்கப் பட்டுள்ளோம். இறைவனின் கருணை, இரக்கத்தினையே நாம் பெற்றுள்ளோம். ஆனால், எத்தனை கொலைகள், கொள்ளைகள், சொத்துக்குவிப்புக்கள், சொத்து அபகரிப்புக்கள், அகால மரணங்கள், வாகன அழிவுகள், ஆகாய விமான விபத்துக்கள், படகு கவிழ்ந்து அழிவுகள், வீடுகள் உடைப்புக்கள், மண்சரிவால் மூடப்படல், நீரால், நிலத்தால், தீயால் அழிவுகள், பூமி, எரிமலைகள் கொதித்தெழுதல், நில அதிர்வுகள், சுனாமி அழிவுகள், அணு ஆயுதங்களால் அழிவுகள், எபோலா வைரசினால் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள், மதம் சார்ந்த யுத்தங்கள், சிறுவர்கள், இளம் பெண்களின் கொலைகள், தாய் மாரினால் குழந்தைகள் கருவிலே கொலை செய்யப்படல், காம, மோக, புகை, போதைவஸ்துக்களால் ஏற்பட்ட அழிவுகள், அகதிகள், இடம்பெயர்வுகள், சொந்தக்காணிகள் அபகரிப்பு போன்ற இன்னோரன்ன கொடிய மிருக இரக்கமற்ற செயல்களால் சோகத்தில் மூழ்கியுள்ளது.

" எமது பாவங்களுக்காகவும் பரிகாரம் செய்யும்படியாக, இறை இரக்க ஆண்டவர், தாயபவுஸ்தினாத் தாயாரின் மூலம் கேட்டுக்கொண்டார். உரோம் நகரத்திற்கு நாளாந்தம் பல நாடுகளில் இருந்து மக்கள் வருகின்றார்கள், தியானம் செய்கின்றார்கள், பாவசங்கீர்தனம் பண்ணி, திருப்பலிகளில் பங்கு பற்றி, தேவ நற்கருணையையும் பெற்று, இறைஇரக்கத்தோடு ஒன்றித்திருப்பதை, மகிழ்ச்சியுடன் குடும்பங்களாக, புனித இடங்களை தரிசிப்பது, எவ்வளவு மகிழ்ச்சிக்குரியதும், பெருமைக்குரிய செயலுமாகும் என்பதை நானும் கண்டுகளித்தேன்.

ஆக்கம் : அருட்சகோ. ஞா.மரியநாதன்
பு.பி.ம.ச.

# சீனா உயிர்ப்புப் பெருவிழாவில் 20,000 பேருக்குத் திருமுழுக்கு



30-03-2016, சீனாவின் பெய்ஜிங் பேராலயத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா திருவிழிப்புத் திருவழி பாட்டில் நூற்றுக்கும் அதிகமான எண்ணிக்கையில், வயது வந்தவர்கள் திருமுழுக்கு பெற்றனர் என்று ஆசிய செய்தி நிறுவனம் கூறியது.

சீனாவில் கிறிஸ்தவர்களாக மாறும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும், இதை ஒரு புதுமை என்றும், செய்தி வெளியிட்டுள்ள அந்நிறுவனம், உயிர்ப்புப்பெருவிழா திருவிழிப்பு திருவெளிப்பாட்டில், சீனாவின் மற்ற ஆலயங்களிலும் மக்கள் புதிதாகத் திருமுழுக்குப் பெற்றனர் என்றும் அச்செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

அதேபோல், கிறிஸ்மஸ், தூய ஆவியார் பெருவிழா, மரியின் விண்ணேற்பு விழா ஆகிய நாள்களிலும், மக்கள் புதிதாகத் திருமுழுக்குப் பெறுகின்றனர் என்றும், கத்தோலிக்க திரு அவையில், ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய ஒரு இலட்சம் வயது வந்தவர்கள் திருமுழுக்குப் பெறுகின்றனர் என்றும் ஆசியச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

# உண்மையான புதுமை என்பது எது ?...

ஜென் துறவி ஒருவர் ஆலயத்தில் போதித்துக் கொண்டிருந்தபோது, அன்பை போதிக்கும் புத்தரின் பெயரைச் சொல்லி நிர்வாண நிலையை அடையலாம் என்ற நம்பி வந்த போதகர் ஒருவர், துறவியின் பேச்சைக் கேட்கத் திரளான மக்கள் வந்து கூடுவதைக் கண்டு பொறாமை கொண்டார். அவரிடம் வாதம் செய்ய விரும்பி, பெரிதாகச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். அதனால் உரையை நிகழ்த்த முடியாமல் தடை ஏற்பட்டது. துறவி தனது பேச்சை நிறுத்தி, என்ன சத்தம் என்று கேட்டார்.

அந்தப் போதகர், " எங்கள் பிரிவை நிறுவியவர் ஒரு கரையிலும் அவரது சீடர் எதிர்க்கரையிலும் நின்றபோது அவர் ஓர் அற்புதம் புரிந்தார். கையில் ஒரு தூரிகையை என் குரு இந்தக் கரையில் வைத்திருக்க, சீடர் எதிர்க்கரையில் காகிதத்தை வைத்திருக்க, எனது குருவே, கடவுளின் பெயரை வானத்தின் வழியே எழுதி அனுப்பினார். உங்களால் அப்படிப்பட்ட அற்புதத்தை நிகழ்த்த முடியுமா? என்று கேட்டார்.

ஜென் துறவி பதில் கூறினார், ஒரு வேளை உனது குரு அப்படிப்பட்ட வித்தையைச் செய்து காட்டி இருக்கலாம். ஆனால், அதற்குப் பெயர் ஜென் இல்லை ! நான் நிகழ்த்தும் அற்புதம் என்ன-வென்றால், எனக்குப் பசி ஏற்படும்போது நான் சாப்பிடுவேன். எனக்குத் தாகம் எடுக்கும்போது நான் தண்ணீரைக் குடிப்பேன் ! அவ்வளவுதான் என்றார்.

## ஒவ்வொருவரிலும் தனித்திறமை உண்டு

ஒரு தோட்டத்தில் பறவைகளுக்குள் ஒரு போட்டி உண்டாயிற்று. யார் அழகாகப் பாடுவது இனிமையாக இருக்கவேண்டும் இதற்கு பறவைகள் நடுவராக இருக்கஇயலாது என்பதே தீர்மானம். நடுவராகத் தெரிவு யாரைச் செய்வதென்று எல்லோரும் யோசித்துக் கொண்டிருந்தனர். இந்நேரம் அவ்வழியால் வந்த நரி இந்த பறவைகளைக் கண்டு என்ன எல்லோரும் கடுமையாக யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்னமும் பிரச்சினையா எனக் கேட்டது. பறவைகள் அன்பரே எமக்குள் ஒரு போட்டி யார் அழகாகப் பாடுகிறார்கள் என்பதேயாகும்.

நரியும் ஊ ஊ ஊளையிட்டு இதுக்குத்தானா யோசிக்கின்றீர்கள் நான் நடுவராக இருக்கின்றேன் என கூறிற்று. பறவைகள் ஆமோதித்துநாளைக் காலை போட்டியை ஆரம்பிப்போம் எனக் கூறியதை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். மறுநாள் காலை போட்டியாளர்கள் எல்லோரும் வந்துவிட்டனர் ஒருவரைத் தவிர சரி போட்டி ஆரம்பிக்கப்பட்டது. அனைத்துப் பறவைகளும் தங்கள் இனிய கானங்களைப் பாடின.

மயிலைப் போலசில அழகான பறவைகளுக்குள் தாங்கள் அழகாகவுள்ளோம் எங்கள் குரலும் இனிமையாகத்தான் இருக்கும் தலைக்கனமும் கூட மயிலோ பாடியது மட்டுமல்ல தோகையை விரித்து ஆடியும் காட்டியது. வான்கோழியும் தானும் பாடியது மட்டுமல்ல ஆடியும் காட்டியது. நரியும் புள்ளிகளைப் போட்டு இறுதியில் சரி இவ்வளவு பேர் தானா என வினவ ஐயா நானும் இருக்கிறேன் என கூறிக்கொண்டே பறந்து வந்தது கரிச்சான். நரியும் ஏன் இவ்வளவு லேட் என கேட்க கரிச்சானும் ஐயா பிள்ளைகளுக்கு சாப்பாடு எடுத்து கொடுத்து வந்ததில் சுணங்கி விட்டது மன்னித்து என்னையும் ஏற்றுக் கொள்ளுங்கள் எனக்கூறியது. பறவைகள் பரவாயில்லை அவரையும் பாட விடுங்கள் என்றன. மனதிற்குள் ஆளைப் பார்த்தா பாட்டைக் கேட்கத்தான் வேண்டுமா என எண்ணிக் கொண்டிருந்தனர்.

பாடியது கரிச்சான் மெல்லிசை மன்னரைப்போல் பல இசையையும் தனது அழகிய குரலில் பாடி எல்லோரையும் மயக்கியது. முடிந்தது போட்டி முடிவைக் கூற ஊ என ஊளையிட்டது. நரியும் கடைசியில் பாடிய கரிச்சான் குருவியை தெரிவு செய்து அதற்கு பரிசு வழங்கியது. பறவைகளுக்கோ இத் தெரிவை ஏற்றுக் கொண்டாலும் மனதிற்குள் ஓர் சிறு கரிச்சான் எங்கள் எல்லோரையும் விட தெரிவானதே என நினைத்தனர். இனிமேல் இது மாதிரி பாட்டுப் போட்டி நடத்துவதில்லை. வேறு போட்டிகளைப் பற்றிப் பார்ப்போம் என எண்ணி கலைந்து சென்றன. "திறமை யாரிடம் உள்ளதென இப்போதுதெரிந்திருக்கும்" ஆகவே எவரையும் குறைவாக எண்ண வேண்டாம்.

## நறுமண மலர் Fr.Ne

**கவி வரிகள் ஆறினையும் சரியாக வடிவமைக்கும் போட்டி**

- மலர்ந்துள்ள
- மலர்களும் கண்டு மணம் வீசுமே
- பூவொன்றினுள்ளே
- இன்புறும்போது அதை
- அமர்ந்த மலர் வண்டொன்று
- இனிகாகத்தேன் பருகியங்கே

- இப்போது மாறி இருக்கும் வரிகளை சரிசெய்யுங்கள்
- சரியாக எழுதவும் இலக்கம் குறிப்பிட்டால் அவை போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.
- உங்கள் பெயர் முகவரியை துலக்கமாக எழுதவும்.
- முடிவுத் திகதி : 30-04-2016
- எல்லோரும் சரியாக வடிவமைத்தால் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும் :
  1ம் இடம் 300/=
  2ம் இடம் 200/=
  3ம் இடம் 150/=
  அனைவரும் ஆர்வமாய் எழுதிப் பரிசைப் பெறுங்கள்.
- அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர்
  திருமலைத்தீபம்
  இல: 297, டொக்கியாட் வீதி,
  திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ம் பக்க தொடர்ச்சி ..........

**நிஜமான நிகழ்வொன்றுடன்...**

சுயநலம் ஒதுக்கப்பட்டு "நாம்" என்ற நல் மனப்பாங்கு முக்கியத்துவம் பெற்று எம்மை அடுத்திருப்போரின் துன்ப துயரங்கள் நிறைந்த துயர்நிலை வாழ்வு எம் கண்களுக்குக் காட்சியளிக்கின்றன. கண்ட காட்சிகளுக்கு மனித மாட்சியுடன் மனிதத்துவம் நிறைந்தவனாக மாபெரும் வழிகளில் உடல், உள, ஆன்மீக தேவைகளில் உதவும் சாட்சியாகத் திகழ்கின்ற மனிதர்களும் இன்று இல்லாமலில்லை இருக்கின்ற மதங்கள் எல்லாம் இதயத்திலுள்ள இரக்கத்தைசெயல் வடிவமாகச் செதுக்கும்படி போதிக்கின்றது. போதித்ததை சாதிக்கத் துடிக்கின்றது. போதனைகளை சாதனைகளாக மாற்றி, மானிடர்களில் பலர் இன்று மாமனிதர்களாக இவ்வையகமதில் திகழ்கின்றனர்.

இரக்கமுள்ள இதயங்களில் இருப்பிடம் கொண்ட நற்குணமே அகிம்சை எல்லாவித வன்முறைச் செயல்களிலும் இருந்து விலகியிருப்பதே அகிம்சை. காந்தி அகிம்சை வழி போராட்டத்தை உலகிற்கு எடுத்துக்காட்டிய உன்னத எடுத்துக்காட்டு. அதனால் தான் அவர் மகாத்மாவாக மலர்ந்தார். ஆயுதம் ஏந்தும் அனைவரும் கோழைகள் என்றார். அகிம்சை வழி போராட்டக்காரர் உண்மை, நீதி, துணிவு, திடநம்பிக்கை, இரக்கம் மூலம் தம் சக்தியைப் பெறுகின்றனர்.

" உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" (மத்5:39), "உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள், உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (5:44) என்ற இயேசுக்கிறிஸ்துவின் இன்னும் எத்தனையோ வார்த்தைகள் இரக்கமதை நேற்றும், இன்றும், என்றும் வாழவேண்டு மென்பதை எடுத்துக்காட்டுகின்றன. தீங்கு ஏற்படும் சந்தர்ப்பங்களில் இருந்து விலகி வாழ்வதுடன் வரும் பிரச்சனை களை அகிம்சை முறையில் தீர்த்து இரக்கமுடையவராகிட வேண்டுமென்பதே வேதங்கள் கூறும் தாரக மந்திரம்.

"ஒரு தாய் தனது ஒரேயொரு குழந்தையிடம் அன்பு செலுத்துவது போல்,
நீங்களும் முழு மனித இனத்திடமும் அன்பு செலுத்த வேண்டும்"

என்றார் புத்த பெருமான். வறுமையின் கொடுமையிலே வாடும்போது, மனநோயால் மடிகின்ற வேளையில், அறிவுப்பசியால் பஞ்சப்படும் சந்தர்ப்ப ங்களில் அமைதி தேடி, ஆறுதலின்றி அல்லலுறும்போதெல்லாம் ஒருவரைத்தேடி, நாடி தோள் கொடுக்கும் தோழனாகி நிற்கத்தூண்டும் மனநிலையே அன்பு என்ற அரிய சக்தியாகும். உயிர் களிடத்தில் காட்டும் அன்பே காருண்யம். இதைச் செயலில் காட்ட இரக்க சிந்தையுடைய வர்களால் மட்டுமே முடியும். மனிதரை அன்பு செய்கின்ற நிலை எம்மத்தியில் இருக்கின்ற போதிலும் விலங்குகளை, இயற்கையை விருப்புடன் அணுகும் பராமரிக்கும் நிலை நவீன மானிட சிந்தனைகளில் மறைந்து சிதைந்து விட்டது.

இந்த தொழிநுட்ப உலகில் இரக்க சிந்தைகளை வளரும் சிறார்கள் உள்ளத்தில் இருந்திட எல்லோரும் உழைத்திட வேண்டும். சிறப்பாகக் குடும்பங்களில் பெற்றோர், பெரியோர், பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், ஆலயங்களில் அறநெறி, மறைக்கல்வி வகுப்புகளூடாக அன்பை, இரக்கத்தை, மன்னிப்பை அனைவரையும் குறைகளுடன் ஏற்றுக் கொள்ளும் உயரிய தன்மைகளை பக்குவமாக எடுத்துக்கூறி, மனதில் பதித்து பொருளாதா ரத்தில், அன்பில், ஆறுதலில், அமைதியில், அரவணைப்பில் ஏழ்மையுற்றவர்களுடன் தேவைக் கேற்ப பரிவுள்ளதைப் பகிர்ந்து தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்கும் நற்குண முடையோ ரைப்படைத்திடுவோம்.

" எரிகின்ற விளக்காயிரு, அப்போதுதான்
மற்ற விளக்குகளை ஏற்றி வைக்கலாம்"

-தாகூர்-

ஆக்கம் : திருமதி. ம. ஜெயவதனி
செல்வநாயகபுரம்



## அன்னை திரேசா

- இவரின் இயற்பெயர் அக்னஸ்
- நம்முடன் வாழும் புனிதை என அழைக்கப்படுகின்றார்.
- ஏழைகள், நோயாளர்களை சிறுவயதிலிருந்தே இவர் அன்பு செய்தார்.
- லொறற்றோ கன்னியர் சபையில் சேர்ந்து 1929 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார்.
- 1910 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ம் திகதி ஐரோப்பாவின் அல்பேனியா நகரில் பிறந்தார்.
- 1931 ஆம் ஆண்டு தெரேசா என பெயரை மாற்றிக் கொண்டார்.
- 1946 இல் அன்பின் கன்னியர் சபையை ஆரம்பித்தார்
- 1985 இல் எயிட்ஸ் நோயாளர்களுக்கான நிலையம் நியோக் நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- 1997 ஆம் ஆண்டு புரட்டாதி 5ம் திகதி மறைந்தார்.

ஆக்கம் : ஆர். மேரி றொஷானி
இலிங்கநகர்.

# தூய தமிழ் தந்த இத்தாலியரான
# யோசப் பெஸ்கி வீரமாமுனியானார்

அன்று ஏட்டெழுத்துக்காலம். பனை ஓலையில் சட்டங்கள் செய்து அவற்றிலே எழுத்தாணி கொண்டு எழுதியகாலம்.

ஏட்டெழுத்துக்களிலே குற்றெழுத்தினால் பனை ஓலை ஓட்டையாகிப் பழுதடைந்து விடுமே என்பதால் "இன்பம்" என்று எழுதுவதற்கு பதிலாக "இனபம்" என்று உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்கும் பேதம் காணமுடியாத முறை யிலே எழுதப்பட்ட காலம்.

எ,ஒ,கெ,கொ போன்ற எழுத்துக்களை நெட்டெழுத்துக்களாக்க அவற்றின் மேலே குற்றிட்டெழுதிய காலமான போதும் அம்முறை கையாளப்படவில்லை.

குற்றற்ற எழுத்துக்களைப் பரம்பரைத் தமிழராகிய எம்மாலேயே படித்தறிந்து பயன்பெறுவதென்பது கஸ்டமானபோது தமிழ் மணமே சற்றுமில்லாத பிறநாட்டார், பிறமொழியாளர் ஒருவர் அதனைக் கற்க முற்படும்போது எங்ஙனம் துயர்படுவர் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இத்தாலி நாட்டை பிறப்பிடமாகவும், அதே மொழியை தாய்மொழியாகவும் கொண்ட கான்ஸ்டான் சியுஸ் யோசப்பெஸ்கி என்கின்ற ஒரு கிறிஸ்தவ மதகுருவானவர் எமது மொழி மீது கொண்ட மட்டற்ற பாசத்தால் அதனைக் கற்க முற்பட்டார்.

துன்பப்பட்டார், துயரப்பட்டார் தமிழைக் கற்கவேண்டும் என்கின்ற வேட்கை மிகுதியால் அன்றைய கடுந்தமிழை ஐயம் திரபுற அணுவணுவாக ஆராய்ந்து ஆராய்ந்து கற்றார்.

செந்தமிழிலே பொதிந்திருந்த தெவிட் டாத தித்திப்பை உள்ளுணர்வோடு சுவைத்து மகிழ்ந்தார். தான் பெற்றுணர்ந்த தமிழின் சுவையை, இனிமையை வைய கம் முழுவதும் உணரச் செய்ய வேண்டுமென ஆசை கொண்டார்.

இந்த ஆசையின் அகோரந் தான் தமிழை செம்மையாக கற்க முற்பட்ட போது உண்டான இடர்பாடுகள் பலதும் தன்னைப்போல மேலும் கற்க இருப்பவர்களுக்கு பாரிய தடையாக அமையலாம் என்பதை உணர்ந்தார். இந்த உன்னதமான உணர்வானது அன்று சங்கம் வைத்து தமிழ் வளர்த்த எந்த ஒரு தமிழ் மகனுக்குமே தோன்றாமை வியப்புக்குரியதாகும்.

தொல்காப்பியரின் பழமை நெறிகளுக்கு மாறாக உயிரெழுத்துக்களுக்கு குற்றிட்டெழுதும் முறை யானது நியாயமற்றது என்று தமிழ் சங்கத்திலேயே மொழிந்தார். பழந் தமிழ் புலவர் சபையானது அக்கருத்தினைப் பூரணமாகவே ஏற்றுக்கொண்டது.

எமது மொழியிலே காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளையும் இத்தாலியரான யோசப் பெஸ்கி என்கின்ற ஒரு கிறிஸ்தவ மதகுருவானவர் சீரமைத்து தமிழ் மொழிக்கு மட்டுமல்ல தமிழ் இனத்துக்கே பெருமை தந்தார்.

**எழுத்துக்களை திருத்தினார்.**

முன்னர் குறிப்பிட்ட குற்றிட்டு நெட்டெழுத்தாக்கப்பட்ட "எ்" ஏவாக, " ஒ " ஓவாக, " கெ " கேவாக " கொ " கோவனாவாக இவ்வாறான குற்றிட்டு நெட்டெழுத்துக்களாக்கப்பட்ட சகல தமிழ் எழுத்துக்களையும் மாற்றி அமைத்தார்.

**அகராதி தந்தார்**

சொற்களுக்குப் பொருள் வேண்டின் பிங்கலம், நிவாரகம், சூடாமணி போன்ற நிகண்டுகள் தேடிய காலத்தே பெஸ்கி அவர்களித்தார். இந்த முறையானது பாவலர், புலவர், அறிஞர் களுக்கல்லாது மற்றவர்களுக்குப் புரியாத புதிராகவே காணப்பட்டது.

இப்பாரிய குறை கண்டுணர்ந்தவர் இலகுவாக சகலருமே அறிந்துகொள்ளும் வண்ணம் தமிழை நெடுங்கணக்கு முறையிலே அகர முறைப்படுத்தி "அகராதி அற்ற தமிழ்" என்று பிறர் குறைபடும் முன்னமே "சதுர் அகராதி" என்ற பெயரில் எமக்கு "அகராதி" படைத்து அகராதியின் தந்தையானார்.

அ. இராசேந்திரம்
ஓய்வுநிலை அதிபர்
மூதூர் - 07

தொடரச்சி அடுத்த மாத இதழில்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத் தொடர்ச்சி.....

இம்மாதம் 9ம் திகதி சகோதரன் றொய்சன் ஸ்பாக்ஸ் குருவாக திருநிலைப் படுத்தப்படுகிறார். எமது மறைமாவட்டத்திற்கே மகிழ்ச்சியான நாள். தேவ அழைத்தல்கள் பெருகவேண்டும் என செபிக்கும் இக்காலத்தில் இவர் தனது மெய்யியல், இறையியல் கல்வியை முடித்துவிட்டு தன்னை இப்பணிக் காகத் தயார் செய்து குருத்துவத்தில் தன் பயணத்தைத் தொடங்குகிறார். இவருக்காக நாம் தொடர்ந்து செபிப்போம். இவர் தனது குருத்துவ பணி மூலம் பலரை இறைவனிடம் அழைத்து வரவேண்டுமென ஆசிப்போம். எமது மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல்கள் பெருகவேண்டுமென செபிப்போம்.

ஏப்ரல் 03ம் திகதி இறையிரக்கத்தின் திருவிழா அலஸ்தோட்டம் இறையிரக்க திருத்தலத்திலே கொண்டாடப்பட்டது. ஆலயப் பணிகளை முழுமையாகப் பூர்த்தி செய்து செபிப்பதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்கியுள்ள பங்குத்தந்தை அருட்பணிபோல் றொபின்சன் அடிகளு க்கும் அவரோடு உழைத்த பங்கு மக்களுக்கும், நன்கொடையாளர்களு க்கும் எமது வாழ்த்துக்களும் பாராட்டும், நன்றியும் உரித்தாகட்டும். இறை யிரக்க திருத்தலம் எமது மறைமாவட்டத்திற்கே பெரும் ஆசீர். இத்திருத் தலப் பணிகளால் மேலும் பலர் ஈர்க்கப்பெறவும், தமது வாழ்வை ஒளிமிக்க வாழ்வாக மாற்றிக்கொள்ளவும்,ஆழ்ந்த இறையனுபவங்களைப் பெறவும் வேண்டுமெனஆசிப்போம்.

இறையிரக்க திருத்தலம் எமது மறை மாவட்டத்திற்கே பெரும்ஆசீர். இத்திருத்தலப் பணிகளால் மேலும் பலர் ஈர்க்கப் பெறவும், தமது வாழ்வை ஒளிமிக்க வாழ்வாக மாற்றிக் கொள்ளவும், ஆழ்ந்த இறையனுபவங்களைப் பெறவும் வேண்டுமென ஆசிப்போம்.

10ம் திகதி தேசிய ஆசிபா (சிறிய கிறிஸ்தவ குழுமங்கள்) தினம். பங்குகள் மட்டத்தில் இது சிறப்பிக்கப்படுகின்றது. சிறிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குதலும் புதுப்பித்தலும் எமது மறைமாவட்டத்தின் முதன்மை மேய்ப்புப் பணி திட்டமாக உள்ளது. அனைவரும் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி ஊக்குவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

17ம் திகதி தேவ அழைத்தலுக்கான தேசிய செபதினம். கத்தோலிக்க திருச்சபையில் 2500 விசுவாசிகளுக்கு ஒருகுருவானவர் என்று ஒரு புள்ளி விபரம் குறிப்பிடுகின்றது. அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என்பது எப்போதும் நாம் காணும் நிலையாக உள்ளது. செபிப்போம். இத்தினத்தில் சேர்க்கப்படும் காணிக்கை கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள பெரிய குருமடங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

10ம், 17ம் திகதிகளில் நான் பங்கு தரிசிப்பு மேற்கொள்ளவுள்ளேன். 10ம் திகதி சாம்பல்தீவு பங்கிலும் 17ம் திகதி மூதூர் பங்கிலும் எனது தரிசிப்பு நடைபெறும். பங்கு மட்டங்களில் மக்களை சந்தித்து உற்சாகப்படுத்தவும் பங்கின் நிறைகுறைகளை இனம் கண்டு அவற்றிற்குத் தீர்வு காண்பதும் இதன் நோக்கமாகும். இந்த சிறப்பானபணி வெற்றியளிக்க செபிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

ஏப்ரல் 24ம் திகதி தேசிய பொதுநிலையினர் தினம் சிறப்பிக்கப்படுகின்றது. பொதுநிலையினர் திருச்சபையில் முக்கிய பங்கேற்கின்றனர். பங்குப்பணிகளையும் மேய்ப்புப்பணியினையும் நடைமுறைப்படுத்த பொதுநிலை விசுவாசிகள் சிறப்பான பங்கு வகிக்கின்றனர். எனவே பொது நிலையினரைப் பாராட்டவும் அவர்களது பொறுப்பு பணிபற்றிய விழிப்புணர்வைக் கொடுக்கும் நாளாக இந்த நாள் அமைந்துள்ளது.

வரவிருப்பதுமரியன்னையின் வணக்கமாதம். அதேமாதத்தில் பெந்தக்கோஸ்து பெருவிழாவையும் நாம் கொண்டாடவுள்ளோம். எமது ஆன்மீகத்தை ஆழப்படுத்த இவையெல்லாம் நல்ல சந்தர்ப்பங்கள். இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி எம் ஆன்மீகத்தை வளர்த்துக் கொள்வோம்.

இறைவன் தாமே உங்களை ஆசீர்வதித்துக் காத்தருள்வாராக.

**பேரருட்.திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.**

# அநீதிகள் மறையவே

அருட்பணி N.C. அருள்வரதன்

- வன்முறைகள்
நாட்டிலின்று
வகை வகையாய்
வெளிவரவே
தொட்டுவரும் துயர்நிலையால்
தூய நிலை மறைகிறதே.

- பச்சிளம் பாலகர்கள்
பள்ளிச் சிறார்கள்
இச்சைகளுக்குள்ளாகி
இழிவுகளுள் வீழ்த்திவிட்டு
கொன்றும் அழிக்கின்ற
கொடுமைகளைக் கேட்கிறோமே.

- தினசரி செய்திகளில்
தினமுமிக் கொடுமைகள்
பெற்ற பிள்ளையையும்
அருவருக்கும் வகையிலே
அழித்துவிடும் கொடிய தந்தை
தாயென்றும் தங்கையென்றும்
தனிப்பெருமை மறந்து
காட்டு விலங்கினைப்போல்
கடும் மனித வெறியாட்டங்கள்
பெருகியின்று
நாற்றமெடுக்கும் நிலைகளாலே
நலிவடைந்ததே
மனித மாண்புகள்

- கொடுமை கொடுமை இந்த
கொடுமைகளை முற்றாக்கியே
பள்ளிச்சிறார்கள்
சின்னஞ்சிறு பிள்ளைகள்
வன் செயலால் வாழ்விழந்து
வழியிழந்து உயிரிழந்து
மறைகின்றபோது
குற்றம் புரிந்துவிட்ட
கொடிய மிருகங்களை
சட்டம் காக்காது
சரிவரத்தீர்ப்பிட்டு
நீதி என்றும் சாவதில்லை என
நிரூபித்துக்காட்டவேண்டும்
காட்டியே ஆகவேண்டும்.

# தேடும் தெய்வம்

நிலவு வானத்தை தேடுகின்றது
நீர் நிலத்தை தேடுகின்றது
கொடிகள் கொம்பைத் தேடுகின்றது - இது இயற்கை

மான் நீரோடையைத் தேடுகின்றது
பசு கன்றைத் தேடுகின்றது
புலி இரையைத் தேடுகின்றது - இது விலங்குகள்

குழந்தை தாயைத் தேடுகின்றது
காதலன் காதலியைத் தேடுகின்றான்
ரசிகன் கலையைத் தேடுகின்றான் - இது மனிதர்கள்

# இறைவார்த்தை

பாவத்தை அகற்றி
பிறரை மன்னிக்க
உள்ளத்தைத்தொட
அன்பைப் பகிர
கருணைக் காட்ட
நிம்மதி பெற
இறைவழி செல்ல
இறைவார்த்தை - எம்
உயிர் வார்த்தையாக
உதவுகிறது.

ஆன்றியோமி. தேவன்
தி/ சென்மேரிஸ் கல்லூரி.

### மறைபரப்பு ஞாயிறு பங்குகளின் காணிக்கை 2015

| இல | பங்கு | பெற்ற தொகை |
|---|---|---|
| 01. | தூய மரியாள் பேராலயம் | 10,000.00 |
| 02. | இறை இரக்கம், அலஸ்தோட்டம் | 4,200.00 |
| 03. | தூய திருமுழுக்கு யோவான், சாம்பல் தீவு | 8,650.00 |
| 04. | குழந்தை இயேசு, உவர்மலை | 9,255.00 |
| 05. | தூய லூர்து அன்னை பாலையூற்று | 26,900.00 |
| 06. | தூய அந்தோனியார், சீனக்குடா | 2,500.00 |
| 07. | தூய சதாசகாய மாதா, கந்தளாய் | 900.00 |
| 08. | தூய அந்தோனியார், மூதூர் | 6,000.00 |
| 09. | திரு இருதய ஆண்டவர், இருதயபுரம், மூதூர் | 5,000.00 |
| 10. | தூய சூசையப்பர், நிலாவெளி | 10,000.00 |
| 11. | தூய குவாடலூப்பே, சின்னக்கடை | 8,051.00 |
| 12. | தூய செபமாலை மாதா, குச்சவெளி | 1000.00 |
| | முழுத்தொகை | **92,456.00** |

### மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை ஞாயிறு பங்குகளின் காணிக்கை விபரம் 2016

| இல | பங்கு | பெற்ற தொகை |
|---|---|---|
| 01. | தூய மரியாள் பேராலயம் | 10,000.00 |
| 02. | தூய லூர்து அன்னை, பாலையூற்று | 40,040.00 |
| 03. | இறை இரக்கம், அலஸ்தோட்டம் | 4,200.00 |
| 04. | தூய குவாடலூப்பே, சின்னக்கடை | 13,080.00 |
| 05. | தூய அந்தோனியார், சீனக்குடா | 1,850.00 |
| 06. | திரு இருதய ஆண்டவர், இருதயபுரம், மூதூர் | 8,000.00 |
| 07. | தூய திருமுழுக்கு யோவான், சாம்பல்தீவு | 6170.00 |
| 08. | குழந்தை இயேசு, உவர்மலை | 7,200.00 |
| 09. | தூய செபமாலை மாதா, குச்சவெளி | 700.00 |
| 10. | தூய சூசையப்பர், நிலாவெளி | 3,120.00 |
| 11. | தூய திருமுழுக்கு யோவான், சாம்பல் தீவு | 5,800.00 |
| 12. | தூய கிறிஸ்து அரசர் , கன்னியா | 1,000.00 |
| 13. | தூய பாத்திமா மாதா, தம்பலகாமம் | 2,000.00 |
| 14. | தூய அந்தோனியார், மூதூர் | 3000.00 |
| 15. | தூய சதாசகாய மாதா, கந்தளாய் | 3250.00 |
| | முழுத்தொகை | 109,410.00 |

தகவல் ⟶
அருட்தந்தை. டெ. அன்ரூஸ் ஸ்பஸன்
நிதிப்பொறுப்பாளர்
மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 18
## திருத்தூதர் பணி அதி 21 - 24 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ஆ | | | | | | | | ■ |
| | ■ | ந | | | | | | | |
| | | ■ | | | | | | கி | ■ |
| | | ■ | து | | சொ | ■ | ■ | ■ | கு |
| | | பே | | | | | ப | | |
| | | | | | | | | | |
| | | | | | | லீ | | | |
| | | ■ | | | | ■ | | | |
| உ | தி | ■ | ■ | பீ | | ■ | ■ | க | ■ |
| ■ | | | | | | | | | உ |

01. க......ற்கரை
02. திரு......தொ....... டர்
03. பி......ந்த......ன்
04. து......ப்பிம்
05. கு......ப்......ம்
06. கி......க்க......ழி
07. பே.......ளி
08. உரோ.......க் கு......ம.......ன்
09. நன்......யு......ர்வோடு
10. ஆசி.......விலி......ந்து
11. உ.......ர்த்தெ.......தல்
12. சொ.......ல.......டும்
13. லீ.......யா
14. பணி வி.......

**பங்குபற்றிய அனைவருக்கும்**
**வாழ்த்துக்களும், நன்றிகளும்.**


போட்டியில் கலந்து கொண்டோர் - 22 பேர்
சரியான விடை எழுதியோர் - 13 பேர்

### பரிசுக்குரியவர்கள்:-

1ம் பரிசு - 500/= ரூபா
பிலிப்பெலிசியன் சேவியர்
இல - 08, பூம்புகார் வீதி
பாலையூற்று

2ம் பரிசு - 300/= ரூபா
தனுஜா போல்
இல - 20, யோசேப்வாஸ் லேன்
பாலையூற்று

3ம் பரிசு 200/= ரூபா
டெ. சனோஜ் அன்ரனி
இல - 10/4, கண்ணகிபுரம்
உவர்மலை



### பாராட்டுக்குரியவர்கள்

01. டிரோன் ஜான்சி - உவர்மலை
02. திருமதி. வி. டொறத்தி - திருமலை
03. புஸ்பா சேவியர் - உவர்மலை
04. டெ. இவேஞ்சலின் - உவர்மலை
05. அ.கரோலினி கீர்த்திகா - பேராலயம்
06. ஜெ. நியோலினி - குவாடலூப்பே
07. ஆர். எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
08. எஸ். நிரஞ்சினி - பாலையூற்று
09. தே. சமில்டன் - நிலாவெளி
10. எல். ரக்ஷனா - உவர்மலை

## ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர் போட்டி எண் - 24
### 1சாமுவேல் [11-20 அதிகாரங்கள்]

### விடைகள்

01. வயலினின்று (11:05)
02. தாவீதின் மீது (18:16)
03. மக்கள் அனைவரும் (12:18)
04. கீழ்ப்படிதல் (15:22)
05. ஈசாய் அபினதாபை (16:08)
06. பெலிஸ்தியருக்கு (17:02)
07. யோனத்தான் (20:13,31)
08. நாவோத்துக்கு (19:23)
09. அப்னேர் (14:50)
10. யாழ் (16:23)

**பங்குபற்றிய அனைவருக்கும்**
**வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

பங்குபற்றியவர்கள் : 22 பேர்
மிகச்சரியான விடையளித்தோர் : 07 பேர்

### பாராட்டுக்குரியவர்கள்


01. பீ.கிரிசாளன் - சாம்பல்தீவு
02. கொட்பிறி நிலோன் - பாலையூற்று
03. ச.டெல்சன் லெற்றிக் - உப்புவெளி
04. டெ.இவேஞ்சலின் - உவர்மலை

### பரிசுக்குரியவர்கள்:-

1ம் பரிசு 600/= ரூபா
டெ. சனோஜ்அன்ரனி
இல : 10/4, கன்னகிபுரம்
உவர்மலை, திருகோணமலை

2ம் பரிசு 300/= ரூபா
உ. சஜீவன்
தூய யோசப்வாஸ் சிறிய குருமடம்,
உப்புவெளி, திருகோணமலை

3ம் பரிசு 200/= ரூபா
ஏ. அனஸ்டீடமியன்
3ம்வட்டாரம்,
நிலாவெளி, திருகோணமலை



## ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர் போட்டி எண் - 25
### 1சாமுவேல் [21-31 அதிகாரங்கள்]

01. 'தாவீது எசிமோனுக்கு எதிரே உள்ள அக்கிலா குன்றில் ஒளிந்திருக்கிறான்' இவ்வாறு சவுல் மன்னிடம் கிரியாவிலிருந்து வந்து கூறியவர் யார்?
விடை :..........................................
02. அதுலாமில் தாவீதோடு சேர்ந்தவர்களின் எண்ணிக்கை?
விடை :..........................................
03. தாவீது பெலிஸ்திய எல்லைக்குள் எத்தனை ஆண்டு? எத்தனை மாதங்கள் குடியிருந்தார்?
விடை :..........................................
04. சவுலும் அவரின் மூன்று புதல்வர்களும் எந்த மலைமேல் இறந்து கிடப்பதை கண்டார்கள்?
விடை :..........................................
05. இஸ்ரேலில் உள்ள நீரூற்றின் அருகே பாளையம் இறக்கியது யார்?
விடை :..........................................
06. சவுல் எத்தனை பேருடன் தாவீதையும், ஆள்களையும் தேடிச் சென்றார்?
விடை :..........................................
07. சாமுவேல் இறந்த பிறகு அவரை எந்த நகரில் அடக்கம் செய்தனர்?
விடை :..........................................
08. பாலைவனத்தில் பாதுகாப்பான இடத்தில் தங்கி இருந்தது யார்?
விடை :..........................................
09. தாவீது எத்தனை பேரைக் கொன்றான்?
விடை :..........................................
10. தமாரிஸ்கு மரத்தின் கீழ் சவுல் என்ன வைத்துக்கொண்டிருந்தார்?
விடை :..........................................

போட்டிக்குரிய பரிசுகளை பரிசுக்குரியவர்கள் அலுவலக நேரத்தில் திருமறை கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்

**இப் போட்டிகளுக்கான முடிவுத் திகதி : 30.04.2016**

**01. திருப்பலி என அழைக்கப்படுவது என்ன?**

கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை நினைவுகூறும் முகமாக குரு குருத்துவ பணியினால் அப்ப இரச வடிவில் கிறிஸ்துவே இறை தந்தைக்கு மீண்டும் ஒப்புக்கொடுக்கும் தியாகப்பலி.

**02. பலியை யாருக்கு செலுத்த வேண்டும்?**

இறைவன் ஒருவருக்கே

**03. திருப்பலி பூசை நிறுவப்பட்டது எப்போது?**

இயேசுவின் மரணத்திற்கு முந்தின நாள்

**04. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை நாம் அன்பு செய்வது எப்படி?**

இறைவனின் கட்டளைகளை கடைபிடித்து அவரது சித்தத்தின்படி அனைத்தையும் நிறைவேற்றும் போது.

**05.கடவுளின் ஏழு முதன்மையான வானதூதர்கள் யார்?**

மிக்கேல்
கபிரியேல்
ரபேல்
ஊரியேல்
ராகுவேல்
செராகுவேல்
ரேமியேல்

**06. இயேசுவின் இரண்டாவது கட்டளை என்ன?**

'உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பர் மீதும் அன்பு கூர்வாயாக.

**07. யாக்கோபு என்பதன் பொருள் என்ன?**

எபிரேய மொழியில் ஏமாற்றுபவன்

**08. இரக்கத்திற்கு எதிரான பாவம் என்பது என்ன?**

பொறாமை, பொறுபற்று செயல்படல், துர்மாதிரிகை.-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்று
## தி/லூர்து அன்னை றோ.க.வி.
# பாடசாலை நிகழ்வுகள்



**பரிசளிப்பு விழா**

பாடசாலையின் பரிசளிப்பு விழாவானது 30-11-2015 எமது மறை மாவட்ட ஆயர் தலைமையில் நடைபெற்ற போது தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் (2015ம் ஆண்டு) சித்தி பெற்ற ஐந்து மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் பங்குத் தந்தையினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

**பாடசாலை தினம்**

பாடசாலையின் பன்னிரெண்டாவது பாடசாலை தினம் 11-02-2016 அன்று நன்றித் திருப்பலியுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விஷேட நிழ்வாக வகுப்பு மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டதுடன் அவர்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதாக சத்தியப் பிரமாணமும் செய்து கொண்டனர்.



**தரம் -1 மாணவர் உள்ளீர்ப்பு**

14-01-2016 ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி. எம்.எஸ்.எம். சேவியர் அவர்களும் ஆசி வழங்குவதற்காக அருட் தந்தையர்களான ஜீட் ஜோன்சனும், ஏ. ஆரோக்கியசாமி அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

தகவல் - பாடசாலை அதிபர்

# தியான வழிபாடு



சகோதரர் கிஷோக் அவர்களினால் தூய மரியாள் பேராலயத்தில் தபக்காலச் சிந்தனையுடன் கூடிய தியான வழிபாடு கடந்த பங்குனி மாதத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இறுவட்டு (CD) வெளியீடு

**கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய இசை இறுவட்டு**

# என் ஜெபம் வீணாகாது

தயாரிப்பு, பாடல்கள், பண்
யோசப் சிபிஸ்ராஜ்

இசை, இயக்கம், ஒலிப்பதிவு
MS.ஸ்ரீகாந்த் [இந்தியா]

பண், இசை உதவி,
அருணன் பெசில் [பாலமீன்மடு]
ஒலிப்பதிவு
ரஜீவ் [இருதயபுரம்]

பாடியவர்கள் :
ஸ்ரீமாலதி, பாண்டியன், சாம் P.கீர்த்தன், நந்தினி , விக்ரம், சந்திக்கா, Fr.A.யேசுதாசன், ரவி, விக்டரின், செல்வக்குமார், சிபிஸ்ராஜ்
(இந்திய, இலங்கைக் கலைஞர்கள்)


இடம் திரு இருதயநாதர் ஆலய முன்றல், இருதயபுரம்
நேரம் பிற்பகல் 5.15 மணி
திகதி 17.04.2016

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# கலையும் உண்மையும்







தவக்காலத்தில் முக்கிய பக்தி முயற்சி திருச்சிலுவைப்பாதை தூய சூசையப்பர் ஆலயத்திலிருந்து 6ம் கட்டையில் அமைந்துள்ள சிலுவை மலை ஆலயத்துக்கு 6ம் கிழமை பகல் 3.00மணிக்கு நிலாவெளி கும்புறுபிட்டி இறைமக்களும் சேர்ந்து வீதி வழியே சிலுவைப்பாதையை ஆரம்பித்தார்கள். இதே போன்று சாம்பல்தீவு தூய யுவானியார் ஆலயத்திலிருந்து வீதிவழியாக ஆரம்பித்து 6ம் கட்டையில் அமைந்துள்ள சிலுவை மலை ஆலயத்தில் ஒன்றுகூடி 12ம், 13ம் நிலைகளை நிகழ்த்தினார்கள். இதனை தொடர்ந்து திருகோணமலை மறை மாவட்ட ஆயர் மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஆண்டவரின் திருப்பாடுகளை காட்சிப்படுத்தும் வண்ணம் பெரிய வெள்ளிக்கிழமை வழிபாட்டுடன் நிலாவெளி, கும்புறுபிட்டி இறைமக்களும் இணைந்து 'கலையும் உண்மையும்' என்னும் ஆன்மீக நிகழ்வை உணர்ச்சிபூர்மாக நிகழ்த்தினார்கள். இன்று ஆலயங்களில் அழிந்து கொண்டுபோகும் 'பசாம்' மீண்டும் பல வருடங்களுக்கு பின் நிலாவெளி பங்கில் உயிர்பெற்றது.

நமதாண்டவர் இயேசுவை சிலுவையில் அறைந்து அசையும் காட்சியைக்கண்ட அனைவரினதும் கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது. அழகுற அமைக்கப்பட்ட அவரின் உடல் உண்மையாகவே நமதாண்டவர் இயேசுவை நேரே காண்பது போன்று தோன்றியது. ஆண்டவரின் திரு உடல் ஆசந்தியாக எடுத்து ஆலயவளாகத்தை சுற்றிவந்தது.

நமதாண்டவர் இயேசுக்கிறிஸ்து பாடுபட்டு இறந்த பின் அரிமத்தியா ஊர் சூசையின் வெற்றுக்கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். அதன் நினைவாக எமது பங்கில் ஆண்டவரை அடக்கம் செய்யும் கல்லறைக்குகை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இதுவே திருகோணமலை மறைமாவட்டத்தில் முதல் முதலாக அமைக்கப்பட்ட கல்லறைக்குகை. எமது ஆயர் மறை மாவட்ட ஆயர் மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்கள் அக மகிழ்வுடன் ஆசீர்வதித்து இறை மக்கள் எல்லோரும் வெளிஅரங்கில் எழுந்து நிற்க தமது ஆசீரையும் வாழ்த்துகளையும் தம் மந்தைகளுக்கு நிறைவாக வழங்கினார்.

தகவல் : பங்கு தந்தையும்,
பங்கு மக்களும்

# பெரிய புல்லுமலை புதுமைமிகு செபமாலை அன்னை திருத்தலத்தின்
## வருடாந்த வைகாசித் திருவிழாவும் புதிய ஆலயதிறப்பு விழாவும்



## கொடியேற்றம் 22.04.2016 மாலை 4.30 மணி

**22.04.2016 அன்று மட்டக்களப்பு மறைமாநில ஆயர்
அதி வணக்கத்திற்குரிய கலாநிதி யோசப் பொன்னையா
ஆண்டகை தலைமையில் புதிய ஆலயம் திறந்து வைக்கப்படும்**

**திருத்தலம் நோக்கிய பாரம்பரிய பாதயாத்திரை
29.04.2016 வெள்ளிக்கிழமை பி.ப 03.30மணிக்கு
புனித மரியாள் பேராலயத்திலிருந்து ஆரம்பமாகும்.**

## திருவிழா 01.05.2016 காலை 7.15 மணி

**அன்னை வழி ஆசீர் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்". (தூயமாற்கு 16:15)